ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

**त्यक्तं गृहाद्यपि मया भवतापशान्त्यै**
**नासीदसौ हृतहृदो मम मायया ते ।**
**साचाधुना किमु विधास्यति नेति जाने**
**तस्मात्त्वमद्य शरणं मम दीनबन्धो ॥** विष्णुस्तोत्रम् ॥

ஸம்ஸாரதுக்கத்திற்குக் காரணமான கிரகம், க்ஷேத்திரம், களத்திரம், தனம் முதலான யாவும் என்னால் விடப்பட்டன. அவ்விதம் விலக்கியும் மாயையால் அபகரிக்கப்பட்ட மனதையுடைய எனக்கு ஸம்ஸாரஸம்பந்தமான தாபம் விலகவில்லை. அந்த மாயையானது இன்னவிதம் செய்யப்போகிறதென்று நான் அறியேன். ஆகையால் வைகுண்டவாஸியான் தீனர்களைப்பாதுகாக்கும் ஹே பிரபோ! இச்சமயத்தில் நீர்தான் என்னை ரக்ஷிக்கவேண்டும்.

ஒருவருக்கு இந்த ஸம்ஸாரத்தாலேற்படும் தாபங்களையடையாமல் இதைவிட்டுவிலகி ஸுகமாயிருக்கவேண்டுமென்று தோன்றினால் இதற்கு தன் வீடு, நிலம், பெண்டீர், பந்துக்கள் முதலியவைகளை விலக்கிவிட்டுத் தனியாய் வேறுஇடத்தில் இருப்பதினால் மட்டும் அத்தாபம் விலகாது. பின்னே மனமும் ஸம்ஸார விஷயமாய் இருக்கும் பற்றுதலை அறவே ஒழித்து ஸ்ரீ பகவானிடத்தில் நிலைபெற்றிருக்கவேண்டும். இத்தன்மை மனதிற்கு எற்படாவிடில் எதை விலக்கியுமுபயோகமில்லை. இக்கருத்தையே.

**चेतस्त्वेकं न वशमयते किं करोमि क्व यामि ।**

சித்தம் ஒன்று ஸ்வாதீனமாகவில்லையே என் செய்வேன் எங்கு செல்லுவேன் என்று ஒரு பெரியாரும் கூறியிருக்கிறார். பின்னும்,

**मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः ।**

மனிதர்களுக்கு ஸம்ஸாரஸம்பந்தமேற்படுவதற்கும் அதைவிட்டு மோக்ஷத்தைப் பெறுவதற்கும் மனமேதான் காரணமென்று மற்றொரு அறிஞரும் வெளியிட்டிருக்கிறார். ஆகையால் ஸம்ஸார கஷ்டம் விலகவேண்டுமானால் மனதை ஸ்வாதீனப்படுத்திக்கொள்ள வேண்டியது முக்கியம்.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

## 1. கர்ப்பாதானத்தின் காலநியமம்.

(௭௦௫-வது பக்கத்தொடர்ச்சி)

ஆகவே, வீர்யபுஷ்டியைத்தரும் ஔஷதங்களை ஸேவிக்க வேண்டும். அதற்காகவே வாஜீகரணமேற்பட்டது. இக்கருத்து அஷ்டாங்க ஹிருதயத்தில்—

अल्पसत्वस्य तु क्लेशैर्बाध्यमानस्य रागिणः ।
शरीरक्षयरक्षार्थं वाजीकरणमुच्यते ॥

ஸத்துவம் (வீர்யம்) குறைந்து, ஆசை மிகுந்து, ராகம் முதலிய கிலேசங்களால் பாதிக்கப்படுகின்றவன் சரீரம் நசித்து விடாமல் ரக்ஷித்துக்கொள்ள வேண்டியதற்காக (இங்கு) வாஜீகரணம் சொல்லப்படுகின்றது.

என்று வாக்படாசாரியரால் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தப் பிரகாணத்தில் சியவனப்ராசாவலேஹம் முதலிய திவ்ய ஔஷதங்கள் பல விதிக்கப்படுகின்றன.

च्यवनप्राशलेहोयं यं प्राश्य च्यवनो मुनिः ।
जरा जर्झरितोऽप्यासीन्नारीनयननन्दनः ॥

இதுதான் சியவனப்ராசமெனப்படும் லேகியம். இதை சாப்பிட்டுத்தான் சியவனர் என்ற மகரிஷி, ஜரையால் பீடிக்கப்பட்டவராயிருந்தும் இந்த ஔஷதப் பிரபாவத்தால் ஸ்திரீகளுக்குப் பிரியப்பட்டவராயினர்.

என்று ஒவ்வொரு ஔஷதங்களின் குணங்களும், சாப்பிடும்முறையும், அளவும், அநுபானமும், சாகம், முதலிய வைத்தியசாஸ்திரங்களில் விரிவாய்க் கூறப்படுகின்றது. அவரவர்களுடைய சரீரப் பிரகிருதிக்குத்* தக்கவாறு தயாரிக்கப்பட்ட ஔஷதங்களைப்பரிசோதித்து ஸேவிக்கவேண்டும். எல்லோருக்குமொரே விதமான ஔஷதம் சேரமாட்டாது. அதையும் பஞ்ச (ஐந்து) சோதனம் செய்துகொண்ட பிறகுதான் ஸேவிக்கவேண்டும். பஞ்சசோதனம் செய்யாமல் ஸேவித்தால் பயனில்லை.

**वाजीकरो वा मलिने वस्त्रे राग इवाफलः ।**

* (பஞ்சசோதனங்களால் சுத்தி செய்விக்கப்படாத சரீரத்தில் ரஸாயனத்தையாவது) வாஜீகர ஔஷதத்தையாவது உபயோகித்தால் எண்ணெக்கசமேறிய வஸ்திரத்தில் சாயமேற்றுவதுபோல் பயனற்றதாய்விடும்.

என்று வைத்திய நூல்களில் வெளிப்படை. இங்கு வைத்திய சாஸ்திரவிஷயம் அனேகம் சொல்லவேண்டியிருப்பினும் பிரகிருத விஷயம் விட்டு வைத்திய விஷயமாய்விடுமோ என்று நிருத்தினோம். ஸ்மிருதிகளிலும் வீர்யபுஷ்டியைத்தரும் ஔஷதஸேவனம் பிரஸித்தமாயுள்ளது. அங்ஙனமே பிருஹஸ்பதி ஸ்மிருதியில்

**तस्माच्छुक्रविवृद्ध्यर्थं वृष्यं स्निग्धं च भक्षयेत् ।**

* சுக்கிலாதிக்கியத்தாற்றான் புருஷபிரஜை யுண்டாவதாயிருப்பதால் சுக்கிலம் அதிகப்படுவதற்காக வீர்யபுஷ்டியைத்தரும் ஔஷதத்தையும், நெய்மேலிட்ட போஜனத்தையுமுட்க்கொள்ளவேணடும்.

என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளுக்கு வீர்யபுஷ்டியைத் தருமௌஷதத்தையாவது போஜனத்தையாவது கொடுக்கக் கூடாது. ஆனால் இலகுவான ஆகாரத்தைக் கொடுக்கலாம். அங்ஙனமே பிருஹஸ்பதி—

**लघ्वाहारां स्त्रियं कुर्यादेवं सञ्जनयेत्सुतम् ।**

ஸ்திரீ, இலகுவான ஆகாரத்தைச்சாப்பிடும்படி செய்யவேண்டும் அப்படியானால் புருஷப்பிரஜையே யுண்டாகும்.

என்று உபதேசிக்கின்றார். இதற்காக சுருதிகளிலும் சில ஸாதனங்கள் உபதேசிக்கப்படுகின்றன. இதன் விரிவை பிருஹதாரண்ணியகோபநிடத்திற்காண்க. இவ்வாறாக சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் புருஷஸந்ததி விருத்தியாவதற்கும் ஸ்திரீஸந்ததி குறைவதற்கும் ஸாதனங்கள் பலஉபதேசிக்கப்பட்டிருக்க, அவைகளை யொன்றையாவது கெவனிக்காமல்பசுபக்ஷிகளைப்போல்கண்டதைக் கண்டபடிதின்று காலநியமமில்லாமல் பிரவேசித்துஸந்ததியை மாத்திரம் வளர்த்துவிடுகின்றார்கள். காலந்தவறி விபரீதகாலத்தில்உண்டுபண்ணப்பட்டஹிரண்யாக்ஷன் ஹிரண்யகசிபுஎன்ற இரண்டுராக்ஷஸர்கள் செய்ததீங்குதேவராலும் முனிவராலும்தாங்கப்படவில்லையென்று ஸ்ரீ பாகவதம் முதலிய புராணங்கேட்டவர்களுக்கு நன்றாய்த்தெரியும். தற்காலத்தில் எல்லா ஸந்ததிகளுமே அவ்விதமாயின் அவர்கள் செய்யும் தீங்கு எவராற்றான் ஸஹிக்க முடியும். "பிரௌடா விவாஹம் செய்துவிடலாமா? அப்படியேதான் செய்துவிடவேண்டும். விதவாவிவாகமோ அவசியம் செய்யவேண்டியது. இவைகளைச் சாஸ்திரம் சம்மதிக்குமா? ஸம்மதிப்பதாகவே மெஜார்ட்டியில் தீர்மானித்து விடுவோம். இதை வைதிகர்கள் சம்மதிப்பார்களா? இந்தப்பழைய கர்னாடகத்தை யார் கேழ்க்கப்போகிறார்கள். அனேகமாய் ஜனங்கள் நம்முடைய கக்ஷியிற்றான் சேருவார்கள். சில பழைவக்கட்டுப் பெட்டிகள் பழையகர்னாடகப்பேச்சைக்கேட்டால் அவைகளை விலக்கிவிட்டுகாரியத்தை நடப்புக்குக்கொண்டுவர ஆரம்பித்துவிடுவோம்" என்பதாதி சாஸ்திரவிபரீத வாதங்களைப்பற்றி வாதாடுபவர்களின் புதிய புதிய பேச்சு, நாளுக்குநாள் எவ்வளவு காதுகளில்வந்து நிறைகின்றனவென்று சிறிது விசாரித்தால் எந்த ஸநாதநதர்மிக்குத்தான் மனம்பதைக்காது. இவ்வளவும் காலநியமம்தவறிநடத்தப்படும் ஸமாவேசனத்தின் பயனும். அன்றியும் ஸ்திரீகளுக்கு விலகியிருக்கவேண்டிய மூன்று நாளில் பற்பல நியமங்கள் சுருதியில் விதிக்கப்படுகின்றன. அவற்றுள் ஒவ்வொரு நியமத்தவறுதலுக்கும் பயனைக் குறிக்குமிடத்து சிற்சில நியமத்தவறுதல்களு

க்கு இம்மாதிரி துஷ்ட ஸந்ததியே பயனாக போதிக்கப்படுகிறது. அன்றியும் துவிஜாதியிற்பிறந்த யாவரும் அவ்வவ்வாச்சிரமத்திற்கு தக்கவாறு விதிக்கப்படும் ஸகல வைதிகதர்மங்களை யனுஷ்டிக்க வேண்டும். அதிலும் அதிக ஐசுவரியமில்லாத கிரஹஸ்தர்கள், அக்கினி ஹோத்திரத்தை மாத்திரம் இஷ்டிகளுடன் செய்தால் போதும், ஒருவருஷத்தில் வரக்கூடிய தனதான்னியாதிகள் தனக்கும் தன் சுற்றத்தாருக்கும் மூன்று வருஷத்திற்குப் போதுமானவரை வரும்படியுள்ளவன் ஸோமயாகம் செய்யவேண்டும். இதனிலுமதிக ஐசுவரியமுடையவன் பெரியயாகாதிகளைச் செய்யவேண்டும். என்பதாதிவிதி சுருதியில் காணப்படுகின்றது. தற்காலத்தில் ஒன்றுமில்லாதவர்கள் ஆங்காங்கு யாசித்தாவது விதிக்கப்பட்டதை விடக்கூடாதேயென்று பயந்துபரமேசுவரனுடைய ஆக்ஞையைத் தவறாது நடத்திவரும் வைதிகப்பிராமணர்கள்மீது அதிக ஐசுவரியமுள்ள பிரபுக்கள், வீணான அவதூர்பேசி துவேஷம்பாராட்டி அவர்களுக்கு ஒருவிதமான உபகாரமும் செய்யாமலிருப்பதுமல்லாமல் உபகாரமேதேனும் செய்வதாக உத்தேசிப்பவர்களையும் தடுத்துப் பலவிதத்திலும் அவர்கள் மனதுதுயரமடையும்படி செய்கிறார்களென்பது பிரபுக்களிடம் பழக்கமுள்ளவர்களுக்குத் தெரிந்த விஷயமே. பிரபுக்கள் வைதிகர்களைப் பலவாறாகத் துன்பமுறச் செய்யும்பொழுது வைதிகர்களுக்குமொரு ஸமயம் அவர்களிடத்தில் துவேஷம்வரலாம். ஆகவே அவர்கள் செய்யுமிஷ்டியில் பிரயாஜஹோமங்கள் ஐந்தையுமனுஷ்டிக்கும் போது முதலாவது பிரயாஜத்தில் எனக்குஒருபுத்திரனும், என்னை துவேஷிப்பவனுக்கும் என்னால் துவேஷிக்கப்படுபவனுக்குமொரு புத்திரியுண்டாகுக என்றும், 2-வது பிராயஜத்தில் தனக்கு 2 புத்திரனும் துவேஷிக்கு 2 புத்திரியுமென்றும், 3-வதில் தனக்கு 3 புத்திரனும் துவேஷிக்கு 3 புத்திரியென்றும், 4-வதில் எனக்கு 4 புத்திரனும் துவேஷிக்கு 4புத்திரியுமுண்டாகுக, என்று துவேஷிகளுக்கு ஸ்திரீஸந்ததியின் அபிவிருத்தியைப் பிரார்த்திப்பதாக மந்திரம் கூறப்படுகின்றது. அதனாலும் ஸ்திரீஸந்ததி அதிகப்படுவதற்கும் அதன் மூலமாய் ஜனங்கள் கஷ்டப்படுவதற்கும் காரணமாகின்றது. இம்மாதிரி கஷ்டங்கள் நேராதபடி ஸமாவேசனத்

தில் காலநியமத்தை யாவருமவசியம் ஆதரிக்கவேண்டும். ஒவ்வொரு ஸமாவேசனமும் மந்திர பூர்வமாகவே செய்யவேண்டும். முதலாவது ஸமாவேசனத்திலும் ருதுகாலத்தில் செய்யப்படும் ஸமாவேசனத்திலும் மாத்திரம் மந்திரம் அவசியமென்று சாரீகி மகரிஷியின் அபிப்பிராயம். இவ்வாறாகவே மந்திரபூர்வகமாய்கால நியமந்தவறாமல் ஸகல சிரேயஸ்ஸுக்கும் மூலகாரணமாகிய முதலாவது ஸம்ஸ்காரத்தை முறைவழுவாதுநடத்தி ஸத்புத்திரனை யடைந்து எங்கும் யாவரும சுகித்திருப்பார்களாக.

(தொடரும்)

ஆர்யதர்மம் பத்திராதிபர்.

---

## ஸஹபோஜநவிசாரம்.

(எகஉ-வது பக்கத்தொடர்ச்சி.)

என்னும் வசனம் அறிவிக்கிறது, இன்னும் போஜனகாலத்தில் சூத்திராதிகள் கண்ணுக்குப்படாத போனாலும் அவர்கள் பேசும் சப்தங்கள் காதில்பட்டால் அந்த சப்தம் ஒய்வு அடைகிறவரையில் போஜனம் செய்யக்கூடாதென்று

तैलयन्त्रेक्षुयन्त्रादेः यावच्छब्दः प्रवर्तते ।
तावत्कालं न भोक्तव्यं शूद्रस्य पतितस्य च ॥

என்னும் வசனம் அறிவிக்கிறது. இது விஷயமான வசனங்கள் ரொம்பவும் எழுதலாம். விஸ்தாரம் ஆகுமென்றும் ஆஸ்திகர்களுக்கு இந்த வசனங்களே போருமென்கிற எண்ணத்தால் விஸ்தரிக்கவில்லை. ஆகையால் ஆஹாரகாலத்தில் சூத்திராதிகளைப்பார்க்கிறதோ அவர்களின் சப்தங்களை கேழ்க்கிறதோ அன்னம் அவர்கள் திருஷ்டியில் படுகிறதோ இவைகள் ஆஹாரத்திற்கு தோஷத்தை உண்டு பண்ணக்கூடியவைகள் அப்படிப்பட்ட தோஷமுள்ள அன்னம் கிரியாதுஷ்டம் ஆகையால் புசிக்கத்தகுந்ததல்ல

என்று சாஸ்திரம் சொல்லும்போது சூத்திரர் பறையர் முதலியவர்களோடுசேர்ந்து ஆகாரம் செய்வது எப்படி பிராமணர்களுக்குப் பிராமண்யத்தை நாசம்செய்து பாதித்தியத்தை அடையும்படி செய்யாமலிருக்கும். ஆனால் எல்லோருடனும் சேர்ந்து போஜனம் செய்யவேணுமென்றுதீர்மானித்திருக்கிறவர்களுக்குப் பிராமண்யமென்றும் அது உத்கிருஷ்டமென்றும் அதின் ரக்ஷணம் ஆவசியகமென்றும் நம்பிக்கை ஏற்படாதபோனாலும் கொஞ்சம் விசாரம்செய்து பிரவிருத்திக்கிற சுபாவமுள்ளவர்களுக்கு இந்த வசனங்களைப் பார்க்கும்போது அதில் நம்பிக்கை இருப்பதினால் விபரீதமான ஸஹபோஜனப் பிரவிருத்தி ஏற்படாதென்றே நினைக்கிறேன். எந்த பிராமண்யத்தை அடைவதற்காக விசுவாமித்திரர் முதலியோர்கள் அனேகம் ஆயிரம் வருஷம் தபசுசெய்தார்களோ எந்த தேஜஸினால் நிக்கிரகாநுக்கிரகஸாமர்த்தியம் பிராசீனர்களான பெரியோர்களுக்கு ஏற்பட்டதோ எந்த தேஜஸுக்குப்பயந்து சக்கிரவர்த்திகள் பிராமணர்களுடைய பாதமூலத்தை ஸேவித்தார்களோ, அவ்விததேஜஸ்ஸை சாஸ்திரீயமான கர்மாநுஷ்டானங்களினால் பிரகாசிக்கும்படி செய்யவேண்டியதை விட்டு ஒருநிமிஷத்தில் அதிகோரமான அகாரியத்தைச்செய்து அந்த தேஜஸுக்கு நாசத்தைத் தேடிக்கொள்வதில் கங்கணம்கட்டிக் கொள்ளும்பிராமணாதமர்களுடைய பெயரை உச்சரிப்பதும் கேழ்ப்பதும் தோஷஹேதுவானதினால் அந்த விஷயத்தை நிறுத்திவிடுகிறேன். சாந்தோக்கியம் முதலிய உபநிஷத்துகள், அவைகளின் தாத்பரியத்தைப் பிரகாசனம்செய்யும் ஸ்மிருதி இதிஹாஸங்கள் இவைகளின் ஸித்தாந்தப்படி கீழ்ஜாதியிலேற்படும் ஜன்மாவானது பூர்வஜன்மத்தில் செய்யப்பட்ட பாபகர்ம விசேஷத்தினால் தாமஸமென்று வெளிப்படுகிறது. ஸஹபோசனம் முதலிய காரியங்களினால் அவர்களுடைய பாபம் பிராமணர்களிடத்திலும் சம்பந்தத்தை அடையுமென்று அனேக வசனங்கள் தெரிவிக்கிறது. எப்படி **ஸாங்க்ராமிகா** அதாவது ஒட்டுவாரொட்டியான குஷ்டம் முதலிய ரோகங்கள்.

प्रसङ्गाद्गात्रसंस्पर्शान्निश्वासात्सहभोजनात् ।
सहशय्यासनाच्चापि वस्त्रमाल्यानुलेपनात् ॥
कुष्ठं ज्वरश्च शोफश्च नेत्राभिष्यन्द एव च ।
औपसर्गिकरोगाश्च संक्रामन्ति नरान्नरम् ॥

என்று சுச்ருத கிரந்தத்தில் சொன்னபடி ஒரு மனிதனிடத்திலி ருந்து இன்னொருவனை ஆக்கிரமிக்கின்றனவோ; அந்தவிதமேயொரு வனுடைய பாபமும் ஸஹபோஜனம் முதலிய காரியங்களினால் மற்றொருவரை சம்பந்திக்கும் என்று.

एकशय्यासनं पङ्क्तिः भाण्डपक्वान्नमिश्रणम् ।
याजनाध्यापनं योनिः तथा च सहभोजनम् ॥
नवधा सङ्करः प्रोक्तः न कर्तव्योऽधमैस्सह । पराशरः ।
आसनाच्छयनाद्यानाद्भाषणात्सहभोजनात् ।
संक्रामन्ति हि पापानि तैलबिन्दुरिवाम्भसि ॥ देवलः ।
सल्लापस्पर्शनिश्वासात्सहशय्यासनाशनात् ।
याजनाध्यापनाद्यौनात्पापं संक्रमते नृणाम् ॥ छागलेयः ।
आलापाद्गात्रसंस्पर्शान्निश्वासात्सहभोजनात् ।
सहशय्यासनात्पापात्पापं संक्रमते नृणाम् ॥ देवलः ।
याजनं योनिसम्बन्धं स्वाध्यायं सहभोजनम् ।
कृत्वा सद्यः पतन्त्येतान् पतितेन न संशयः ॥

என்கிற வசனங்கள் அறிவிக்கின்றன. ஒருவருடைய மனதில் இருக்கும் தோஷம் திருஷ்டி, மூலம் பதார்த்தங்களில் சம்பந்திக் கிருக்கிறதும் அதற்கு திருஷ்டிதோஷ பரிஹாரமாக ரக்ஷைகள் செய்கிறதும் எல்லாருக்கும் அனுபவசித்தம். அதுபோல் பாப மும் திருஷ்டிமூலம் பதார்த்தங்களை சம்பந்திக்கும் என்பதில் சந் தேகமில்லை. அதினாலேயே புசிக்கக்கூடிய ஆஹாரங்களுக்குத்

தடுக்கமுடியாத தோஷசம்பந்தங்கள் சிலவைகள் ஏற்படக்கூடு மென்றுதான் தானியங்களை சேர்க்கிறகாலம் முதல் மந்திர பூர்வக மான ஹோமங்களும் சில சுத்திவிசேஷங்களையும் சாஸ்த்ரம் பிர காசீனம்செய்தப்பிரகாரம்பிராசீனர்கள் அனுஷ்டித்துவருகிறார்கள். இன்னம் எவர்களோடு ஸல்லாபம் முதலியவைகள் விசேஷமாக ஏற்படுகின்றனவோ அவர்களுடைய குணங்கள் கிரமமாக இவர் களையும் அடையுமென்பது நிச்சயம். இதற்குக் கீழ்ஜாதிகளு டைய ஆதிக்கியமுள்ள கிராமத்தில் ஸத்ஸங்கமில்லாமல் அவர் களோடு சேர்ந்து வஸிக்கும் பிராமணர்களுடைய கிராம்யமான பேச்சுக்களே திருஷ்டாந்தம். அதினால்தான்.

शूद्रान्नं शूद्रसंपर्कः शूद्रेण तु सहासनम् ।
शूद्रात् ज्ञानागमश्चापि ज्वलन्तमपि पातयेत् ॥

என்று சூத்திரஸஹவாஸாதிகள் தடுக்கப்படுகின்றன. ஆனால் சாத்விகர்களாயும் அகிருத்தியம் இல்லாதவர்களாயும் இருக்கும் சூத்திராதிகளோடு சேர்ந்து புசித்தால் என்ன தோஷமென்று ஒரு சங்கைநிகழலாம். அதுவும் தோஷந்தான்.

இப்போது அவர்கள் தோஷம் இல்லாதவர்களாக இருந்த போதிலும் சூத்திரஜன்மஹேதுவான பிரபலப்பிராரப்தபாபமிருப் பதினால் அவர்களோடு சேர்ந்து போஜனம்செய்வது சாஸ்திரவிரு த்தம்தான். செய்தால் அந்தபாபம் இவர்களையும் சம்பந்திக்கும். அகிருத்தியம் இல்லாமல் சாத்விகமாக இருப்பது அவர்களுக்கு க்ஷேமத்தை கொடுப்பதில் சந்தேகமில்லை. அந்த குணவிசேஷத் தினால் அவர்கள் எந்தவிதமான சிரேயஸ்ஸையும்ஜன்மாந்திரத்தில் அடையலாம். இன்னும் இன்னார் பாபமுள்ளவர்களென்று நிச்ச யம் செய்ய முடியாததினால் ஸமாநஜாதீயர்களோடுகூடச்சேர்ந்து ஒரு பங்க்தியில் போஜனம் அனுசிதமென்று

अप्येकपङ्क्तौ नाश्नीयात् संवृतस्स्वजनैरपि ।
को हि जानाति किं तस्य प्रच्छन्नं हृदि पातकम् ॥

என்றீ வசனம் தெரிவிக்கும்போது விஜாதீயர்களோடு சேர்ந்து போஜனம் செய்வது அத்தியந்தம் அகாரியம் பாதித்தியத்தை அடையும்படி செய்யும் என்பதில் சந்தேகமேயில்லை.

அப்படிச் சேர்ந்துசெய்யும் போஜனத்தினுல் பாதித்தியம் அடைவதைத்தவிர வேறு பாபமும் தெரியவில்லை. ஒற்றுமை ஏற்படுவது பலமென்றுயெண்ணும் திருத்தக்காரர்களுடைய நிச்சயம் பிரமத்தினுல்தான். ஒற்றுமைக்கும் சேர்ந்து சாப்பிடுவதற்கும் எப்படிக் காரியகாரணபாவம். சேர்ந்து சாப்பிடுவதால் ஒற்றுமை உண்டாவதானுல் ஸஹபோஜனம் செய்யும் ஜாதிகளில் ஒற்றுமை யிருக்கவேணும், செய்யாதவர்களுக்குஇருக்கக்கூடாது அனுபவத்தில் அப்படி இல்லை. சேர்ந்து சாப்பிடுகிற அண்ணன் தம்பிகள் பிதாபுத்திரர்கள் ஒற்றுமை இல்லாமல் கோர்ட்டிலேயே வியவஹாரம் செய்துகொண்டிருக்கிறுர்கள். விஜாதீயர்களாக இருப்பதினுல் ஸஹபோஜனம் ஏற்படாதவர்களுக்கும் எந்தக்காரியங்களிலும் மனதிற்குக்கு ஒற்றுமையும் அன்பும்விருத்தியாகிவருகிறது. ஆகையால்ஸஹபோஜனம்ஒற்றுமைக்குக்காரணமல்ல. இன்னமும் ஸஹபோஜனத்தினுலேயே ஒற்றுமையை அடைய முயற்சிக்கிறவர்களும் சமானஅந்தஸ்தை அடைந்து விஜாதீயர்களோடு ஸஹபோஜனம் வைத்துக்கொள்ள வேணுமென்றுயெண்ணமே தவிர கீழ்ப்பட்ட நிலைமையில் உள்ளவர்களோடு ஸஹபோஜனம் செய்வதாகக்காணேும். அவர்களோடும் சமஸ்திதியை அபேட்சிப்பதாக இருந்தால் ஸஹபோஜனம் செய்யவேணும். அவர்களை வண்டி ஓட்டுகிறவர்களாகவும் தோட்டியாகவும் இருப்பதினுல் ஸஹபோஜனம் செய்யக்கூடாதவர்களாக நினைத்தால் ஒற்றுமை சாம்மியம் இதற்கு அர்த்தம் என்ன? சரீரத்தினுலேயோ திரவியத்தாலோ புத்தியினுலோ சுகத்தினுலோ ஸ்திரீயினுலோ சாம்மியம் ஏற்படாத நிலைமையில்ஸஹபோஜனத்தினுல்தான் சாம்மியம் ஏற்படவேணும். அதிலும் கீழ்பட்ட அந்தஸ்து உள்ளவர்களோடு சாம்மியம் ஏற்படாதவரையில் எந்தவிதம் சாம்மியம் ஏற்படுமென்பதை நாகரீகர்கள்தான் தெரிவிக்கவேணும். இவர்களுடைய பிரவிருத்தி அனர்த்தத்தை செய்யக்கூடியதே தவிர ஒருக்காலும் க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடியதல்ல. மேற்கு தேசங்

களிலும் பிரபுக்கள் தரித்திரர்களோடுசேர்ந்து போசனம்செய்வதில்லை. ஐகமத்தியம் லோகக்ஷேமகாரணம் என்பதில் ஆட்சேபணையேயில்லை. அந்த ஒற்றுமை ஸஹபோஜனத்தினால் ஒருக்காலும் ஏற்படாது. ஆகையால் ஆஸ்திகர்கள் எல்லோரும் சாஸ்திரங்களைநம்பி விஜாதீயர்களோடு ஸஹபோசனத்தை நிஷேதித்து ஆஹார சுத்தியால் அந்தக்கரணசுத்தியை அடைந்து ராகத்துவேஷாதிகளான தோஷங்களை விட்டு பாலர்களான இதரர்களுக்கும் சன்மார்க்கப் பிரவிருத்தி உண்டாகும்படி செய்யவேணும். சாஸ்திரங்களையே நம்பாதவர்களுக்கு எழுதவேண்டிய விதம்வேறு நம்பினவர்களான ஆஸ்திகர்களிடத்தில் ஸ்மிருதி வாக்கியங்களைக் கொண்டு என்மனதில் தோன்றினதை தெரிவித்துக் கொண்டேன். இந்த அனர்த்த ஹேதுவானப் பிரவிருத்திகளெல்லாம் இதரர்களிடத்தில் ஏற்பட்டால் கெடுதல் சீக்கிரம் ஏற்படமுடியாது. அதினால்தான் கலிபுருஷன் பிராமணர்களுடைய மனதில் பிரவேசித்து எப்படி சீக்கிரம் அதர்மவியாப்தியினால் லோகத்திற்கு விநாசம் ஏற்படுமோ அந்தவிதம் பிரவிருத்திக்கும்படி பிரேரணை செய்வதால் இப்படி துஷ்டமான சமஜங்கள் ஏற்பட்டு அனேகம் பேர்களுக்கு புத்திகலக்கம் ஏற்படுகிறது. ஆனாலும் இந்தக் காலத்திலும் பகவானுடைய கிருபாவிசேஷத்தினால் அனேகம் பண்டிதர்கள் பிராசீநாசாரவியவஸ்தாபகாளாக இருந்து துர்மதங்களை நிராகரணம் செய்வதினால் எதிர்பார்க்கிறபடி தர்மத்திற்கு விநாசம் வராதென்கிறதே என் நம்பிக்கை இப்பவும் சமீபத்தில் நடந்த திருச்சினாப்பள்ளி அத்வைத சபையில் பிரபல பண்டிதர்கள் ஒன்றுசேர்ந்து மதவிஷயமான உபந்யாஸங்களைச் செய்து அனேகம் பேர்கள் மனசில்ஏற்பட்ட சந்தேகங்கள் நிவிருத்தியாகும்படி செய்தார்களென்று தெரிந்துகொண்டு ஆனந்தித்தேன்.

சிரத்தானந்தரென்று பெயர்பூண்ட ஒருவர்தம்மைப் பெரியாரென்று பிறர் கூறும்படியான வேடம்பூண்டு பல விடங்களிலும் சென்று கீழ்ஜாதியிலிருப்போர்களைத் தமது உபதேசத்தால் மேல் ஜாதிக்குக்கொண்டு வருகிறதாக பேபர்கள்மூலம் அறிந்து மிகவும் வியஸநிக்கிறோம். சாஸ்திரங்களுக்கும் சிஷ்டாசாரங்களுக்கும்

விரோதமான இந்தக் காரியத்தை இவர்கள் எந்தப் பிரமாணத்தைக்கொண்டு செய்கிறார்கள்.

ஏர்க்கனவே இந்த விஷயமான விசாரத்தில் வித்தியாவாசஸ்பதி அப்பாசர்மா முதலிய வித்துவான்களினால் பிராசீன கிரந்தங்கள் பிராசீனரான உத்தரதேசியாளான பிரபல பண்டிதர்களால் எழுதப்பட்ட நிபந்தன கிரந்தங்கள் இதுகளுடைய பரிசீலனத்தின்பேரில் பதிதோத்தார மீமாம்ஸா கண்டனம் முதலிய கிரந்தங்கள் செய்யப்பட்டு அதில் பிரும்மஹத்தியாதிகளினால் ஏற்படும் பாதித்தியத்தைக் காட்டிலும் ஜன்மாவினாலேயே ஏற்படும் மிலேச்சபாவரூபமான பாதித்தியம் பிரபல தோஷமென்றும் ஸ்வமதத்தைவிட்டு சாதுர்வர்ணிய வியவஸ்தாரகிதமான மிலேச்சமதப்பிரவேசம் ஏற்பட்டால் மூன்றுநாள் அந்த அன்னபோஜனத்தினாலேயே தத்பாவம்ஏற்படுகிறதென்றும் அவர்களுக்குப்பிராயச்சித்தானுஷ்டான பூர்வகம் ஸ்வமதத்தில் சேர்த்து ஸம்வியவஹாரம்செய்வது சாஸ்திர சம்மதம்இல்லையென்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அது விஷயமான பிரமாண வாக்கியங்களை பிந்தி எழுதுகிறேன். அதைப்பார்க்கும்போது இப்போது செய்யப்பட்ட சித்தாந்தம் மனதுக்கு கலக்கத்தை உண்டுபண்ணுகிறது. சிகாயக்ஞோபவீதபரித்தியாக புரஸ்ஸரம் மதாந்திரப் பிரவேசம் ஏற்பட்டவர்களுக்கு ஒவ்வொரு நிமித்தங்களுக்கும் தகுந்த பிராயசித்தத்தை விரித்து சுத்திசெய்து ஸ்வமதத்தில் சேரும்படிசெய்வது அசாத்தியமென்றே தோன்றுகிறது. அப்படி விதித்து சுத்தி ஏற்படுவதாயிருந்தாலும் ஸம்வியவகாரத்திற்கு அனர்கர்களென்றே விளங்குகிறது. ஆரியசமாஜம் முதலிய சமாஜங்கள் அவர்களைஉத்தாரணம் செய்யக்கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள், வைதிகர்களான பண்டித சிரேஷ்டர்களும் இதற்கு இடங்கொடுப்பதுஉசிதமாகப்படவில்லை. இந்தவிஷயத்தை நிதானித்துச் செய்யும்படி பண்டித சிரேஷ்டர்களைப் பிரார்த்தித்துக் கொள்வதுடன் தர்மவிருத்தியால் லோகக்ஷேமத்தை உண்டுபண்ண அந்தர்யாமியான சர்வேசுவரனை பிரார்த்திக்கிறேன்.

சிவராமகிருஷ்ணசாஸ்திரிகள்,

மாயவரம்.

## சென்ற 44-வது ஸஞ்சிகையில் சில திருத்தங்கள்.

| ப. | வ. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 706 | 8 | ஸமாதானங்களினால் | ஸமாஜங்களினால் |
| | 26 | வாஸனாதிவசனத்தினால் | வாஸனாவசத்தினால் |
| 709 | 20 | சாஸ்திரீயங்களில் | சாஸ்திரங்களில் |
| 710 | 26 | புத்தியைக்கொடுக்கு மென்பது | புத்தியைக்கெடுக்கு மென்பது |
| 711 | 26 | सुहृल्लोकं | सुहृल्लेखं |

---

## ஸ்ரீ வாஞ்சியூர் தேவஸ்தானத்தில் கிருத்திகா பாநுவார மஹோர்த்ஸவம்.

இவ்வூரில் இதற்குமுன் ஒவ்வொரு வருஷத்திலும் கிரமமாக இந்தஉத்ஸவத்தைநடத்திப்பிராமணஸந்தர்ப்பணைகளையும்செய்து வந்த பஞ்சாபகேசசாஸ்திரியள் தற்காலம் நடத்த யோக்கியதை யற்றவராகயிருப்பதையறிந்து நான் இவ்வூரில் பல பக்தர்களிடம் அறிவித்ததில் முதற்கிழமை ஸமீபத்தில் வந்துவிட்டபடியால் அடுத்த கிழமைமுதல் செய்வதாகச் சொன்னதை யங்கிகரித்து முதல் கிழமையில் கோவில் பிரஸாதங்களையே வந்திருந்த பிராமணர்களுக்குக் கோவிலிலேயே விநியோகம்செய்து பிறகு மண்டகப் படிக்காரர்களுக்கும் வாஞ்சியூர் மஹாஜனங்களுக்கும் கொடுக்கப் பட்டன? அடுத்த கிழமைமுதல் கிரமமாக ஸந்தர்ப்பணை நடத்து வதற்காக 150 ஜனங்கள் போஜனம் செய்யக்கூடிய விஸ்தார முள்ள ஒருகொட்டகையும் ஆலயத்திற்குக்கீழ்பாகத்தில்போடப் பட்டது. பிறகு இந்ததர்ம கைங்கர்யத்தை நன்றாய் நடத்தவேண் டுமென்று மிகவும் ஊக்கம் கொண்டுமுன்வந்த—நரிமணம்—மகா-ா -ஸ்ரீ க. வெங்கடராமய்யர் அவர்கள் எம். ஏ. பட்டாபிராய்யர் சோமுவய்யரவர்கள் கே. ராமய்யாவர்கள். மில் சுந்தரமய்யாவர் கள் பி. வீராஸாமிய்யரவர்கள், சா. ராமஸ்வாமி சாஸ்திரிகள். கிருஷ்ணஸாமிய்யரவர்கள், பண்டகசாலை ராமச்சந்திரய்யரவர்கள்

முதலான பல பக்தர்களும் வாஞ்சியூர் ஆர். எம். பக்கிரிஸாமி பிள்ளை அவர்களும் வேண்டிய பணவசூல்களைச்செய்து சுமார் 100 பேர்களுக்குக் குறைவில்லாத பிராமண ஸந்தர்ப்பணையையும் பிறகு சைவாள் முதலான பக்த ஜனங்களுக்கும் போஜனமும் விமர்சையாய் நடத்திவைத்தார்கள் கொஞ்சம் விசேஷமாக உப கரித்து இந்த கைங்கர்யத்தை நன்ருய் நடத்திவைத்த மகா-ா-ஸ்ரீ வாஞ்சியூர் பக்கிரிஸாமிபிள்ளை அவர்களும் மற்றுமுள்ள ஸகல ஜனங்களும் அதிக சந்தோஷத்துடன் சிறப்பாய் ஷஷ்டி உத்ஸவத் தைப் பூர்த்திசெய்தார்கள். இவ்விதம் தர்ம்மகாரியத்தில் ஊக்க மெடுத்துக்கொண்டு முன்வந்து உத்ஸவத்தை நன்ருய் நடத்தி வைதத தம் பக்தகோடிகளுக்கு மெம்மேலும் விசேஷமரன சிரே யஸ்ஸை யளிக்கவேண்டுமாய் இங்கு விளங்கும். ஸ்ரீவிசுவநாதரை எப்பொழுதும் பிரார்த்திக்கின்ருேம்.

காளஹஸ்தீச்வர சாஸ்திரீ.
ஸ்ரீமடம் குமாஸ்தா.

---

## குருபக்தி.

ஒரு பிராமணன் ஜநிக்கும்போதே மூன்று கடனேடு பிறக் கிருன். அவை ரிஷிகடன், தேவகடன், பிதுருகடன், என்பன.

**जायमानो वै ब्राह्मणस्त्रिभिर्ऋणवान् जायते ब्रह्मचर्येण ऋ-षिभ्यो यज्ञेन देवेभ्यः प्रजया पितृभ्य इति ॥**

பிரும்மசர்யாச்ரமத்தால் ரிஷிகளுடைய கடனேயும், விவாஹம் பண்ணிக்கொண்ட பிறகு ஔபாஸனம், அக்நிஹோத்திரம் முத லான கர்மங்களால் தேவர்களுடைய கடனேயும், பிரஜையை உண்டு பண்ணுகிறதால் பிதுர்க்களுக்குடைய கடனேயும், தீர்த்து விடுகிருன். அதற்குள் ரிஷிகளுடைய கடனைத் தீர்க்கக் கூடிய பிரும்மசர்யாச்ரமம். குருபக்தியை முன்னிட்டு நிற்கிறது. குரு பக்தியில்லாத பக்ஷத்தில் அந்த ஆச்ரமம் நிலை நிற்கிறதில்லை.

ஆகையால் குருபக்தியை மூலமாய் உடைய அந்த ஆச்ரமத்தை ஸரியாக நடத்தி ரிஷிகளுடைய கடனைத் தீர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். எல்லா ஆச்சிரமத்திலும் குருபக்தி இருந்தாலும் ப்ரதானமாய் உடையது பிரும்மசர்யாச்ரமமே. உபநயந காலத்தில் முக்கியமான உபதேசம் आचार्याधीनोभव என்றால் உடனே बाढं என்று சொல்கிறான். அதனுடைய அர்த்தம் சொல்லுகிறவனுக்கும் தெரியாது, சொல்லிவைக்கிறவனுக்கும் தெரியாது. (அதனுடைய) அர்த்தம் சிஷ்யனைப் பார்த்துக் குருவான பிதாவானவன் குருவினுடைய அதீனனாக இருக்கக் கடவாய் என்று தெரிவித்தான். உடனே ஸரி, என்று சொல்லிவிட்டான் அதோடு நின்றுவிட்டது பிரும்மசர்யாச்ரமம், அதற்குமேல் ஒருவரும் கவனிக்கவில்லை. அதனால் மூலபூதமான ஆச்ரமத்தில் குருபக்தி முதலான அடிப்படைகள் நம்மிடத்தில் குறைவு அடைந்து இருப்பதால் பிறகு எவ்வளவு உபதேசம் செய்தபோதிலும் பிரயோஜனம் இல்லாமல் போய்விடுகிறது. ஆகையால் நாம் இப்பொழுது தெரிந்துகொள்ள வேண்டியது இரண்டு விஷயம். பிரும்மசர்யாச்ரமத்தினுடைய விதி அதற்கு மூலபூதமான உபநயநத்தினுடைய ஸ்வரூபம் (குருமஹிமை) அதில் பிரகிருதமான குருமஹிமையைச் சற்று விசாரிப்போம். குரு என்றால் யார்? அக்ஞானத்தை நிவர்த்திசெய்து வைப்பர். இந்த சப்தத்திற்கு முக்கியமான அர்த்தம். தவிர வேறு சிலர்களிடத்திலும் இந்த சப்தத்தை உபசாரமாய்ச் சொல்லுகிறதும் உண்டு. பிதா ஜேஷ்டன், உபநயநம் செய்வித்தன். ரக்ஷிக்கிறவன், மந்திரோபதேஷ்டாக்கள். வேதாத்தியயனம்செய்துவைத்தவர். தவிர ஸகலமான வேதங்களையும் சொல்லிவைத்து அவற்றினுடைய அர்த்தத்தையும் போதித்து பிரும்மஞானத்தை எவர் போதிக்கிறாரோ அவர்தான் குரு. கீழ் சொல்லப்பட்ட விஷயங்கள் பிதாவினிடத்திலேயே யிருந்துவிடும் பக்ஷத்தில் அவரை மஹாகுருவென்றும் ஸ்வாமிகள் ஆசார்யர் என்றும் சொல்லுவார்கள்.

சிஷ்யனுடைய ஹிருதயத்திலுள்ள அக்ஞானத்தைநிவர்த்தி செய்யக்கூடிய குருக்கள் கிடைப்பது துர்லபம்.

बहवो गुरवस्सन्ति शिष्यवित्तापहारकाः ।
दुर्लभो हि गुरुर्ज्ञेयो शिष्यहृत्तापहारकाः ॥

என்பதால் சிஷ்யனுடைய ஹிருதய தாபத்தை போக்கடிக்கக்கூடிய குரு கிடைப்பது ரொம்பவும் அரிது. அவர்களை நம்மைப்போல் ஒருவராக மதிக்கவே கூடாது. ஈசுவரனாகத் தியானம் செய்ய வேணும் இல்லாத பக்ஷத்தில் நரகத்தை அடைவான் என்பது சாஸ்திரம்.

गुरौ मनुष्यबुद्धिं च मन्त्रेत्वक्षरबुद्धिताम् ।
प्रतिमासु शिलाबुद्धिं वितन्वन्नरकं व्रजेत् ॥

என்று இருப்பதால் அவசியம் குருவைத் தவிர வேறு தெய்வம் இல்லையென்றே சொல்லலாம். தவிர சாஸ்திரங்களில் பரமேசுவரனுக்கு இரண்டுவிதமான உருவம் அதாவது 1. கோவில்களில் பிரதிமா ரூபம். 2 குருமூர்த்தமாயிருப்பது. ஆகையால் சரூபமான குருமூர்த்தங்களை உபாஸிக்கும் பக்ஷத்தில் எதை நாம் தியானம் செய்கிறோமோ அதைபடையலாம். புராணங்களிலும் அனேக பக்தர்கள் குருபக்தியினால் உயர்ந்த நிலைமை அடைந்து இருக்கிறார்கள். ஏகலைவன் சரித்திரம், உதங்கனுடைய சரித்திரம் இவை ஸாக்ஷிகள். அனேகமாய் ஏகலைவனுடைய சரித்திரம் பிரஸித்தம். அதைக் குறிக்கவில்லை. உதங்கனுடைய சரித்திரத்தை சற்று விசாரிப்போம். பாரதத்தில் விளங்குகிறது. அதாவது உதங்கன் என்பவன் பிராமண குமாரன். அவனை உபநயம் செய்த பிறகு அவனுடைய பிதா அவனைக் குருகுலவாஸத்தில் இருக்கும்படியாய் செய்தார். அவனோ குருவை பரமதெய்வமாகத்தியானித்து அவர்களுடைய கட்டளையைத் தவறாது நடத்திவந்தான். ஸமிதாதானம் பிக்ஷாசரணம் முதலான ஆச்ரமதர்மங்களையும் ஒழுங்காகவே நடத்தினான். இப்படிக்கு ஆச்ரமத்தில் இருந்துவரும் காலத்தில் இவனுடைய குருவானவர் இவனுடைய குருபக்தியைப் பரீக்ஷிக்கத் தொடங்கினார்.

(தொடரும்)

ராமாயணம் ஸேதுராமய்யர்.